# காஞ்சிபுரம் மாநகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2025-2026

(01.04.2025 முதல் 31.03.2026 வரை)

# காஞ்சிபுரம் மாநகராட்சி

# 2025–2026–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

1. **பணி அமைப்பும் தன்மையும் :–**

காஞ்சிபுரம் பழைமையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும், புனிதத் தன்மையும் கொண்ட பல கோயில்கள் அமைந்த ஒரு யாத்திரை நகரமாகும். இந்நகர், உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த பட்டுத் துணிகளுக்கு உலகப்புகழ் பெற்றது. இந்நகராட்சி 01.11.1866–ல் தோற்றுவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.651, நாள்.09.05.1993–ல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது, தற்போது அரசாணை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.12.2008–ல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.14.01.2011–ன்படி காஞ்சிபுரம் நகராட்சியுடன் அருகாமையில் உள்ள செவிலிமேடு பேரூராட்சி, தேனம்பாக்கம், ஓரிக்கை மற்றும் நத்தப்பேட்டை ஊராட்சிகள் எல்லை விரிவாக்கத்தின்போது சேர்க்கப்பட்டது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு காஞ்சிபுரம் நகராட்சியின் பரப்பளவு 36.14 சதுர கிலோ மீட்டராகும். தற்போது நகராட்சி 51 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு அவசர சட்டம் எண்.02 நாள்.20.10.2021 அரசிதழ் எண்.494, நாள்.21.10.2021–ன்படி காஞ்சிபுரம் பெருநகராட்சியினை 21.10.2021 முதல் காஞ்சிபுரம் மாநகரட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சியில் 51 வார்டுகளை கீழ்கண்டவாறு 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மாநகர் மன்ற தீர்மானம் எண்.162, நாள்.09.11.2021–இல் மன்ற அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் எண்.590, நாள்.14.12.2021 –இல் வெளியிடப்பட்டது.

| வ.எண் | மண்டலம் | வார்டுகள் |
|---|---|---|
| 1 | மண்டலம் – 1 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 16, 17 & 18 |
| 2 | மண்டலம் – 2 | 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30 & 34 |
| 3 | மண்டலம் – 3 | 31, 32, 33, 35, 36, 45, 46, 47, 48, 49, 50 & 51 |
| 4 | மண்டலம் – 4 | 11, 12, 13, 14, 15, 37, 38, 39, 40, 41, 42, 43 & 44 |

காஞ்சிபுரம் நகராட்சியானது அரசாணை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.11.2008–ல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயலபட்டு வந்தது. இது தறபோது 51 வார்டுகளை உளளடக்கியதாகவும் 36.14 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும் 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 234353 மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது. மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சி அரசு வெளியீடு நாள்.20.10.2021 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது அரசாணை (நிலை) எண்.152, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.7) துறை, நாள்.20.10.2022ல் மாநகராட்சிக்கு 102 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

**1.1 ஆட்சி எல்லை :–**

இந்நகராட்சி பரப்பளவு 36.14 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இந்நகராட்சியின் எல்லையில் அறிக்கை ஆண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை.

2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சி மக்கள் தொகை 234353 ஆகும்.

**2.1. மாமன்ற கூட்டங்கள் :–**

மேயர் அவர்களின் தலைமையில் 01.04.2025 முதல் 31.03.2026 வரை அறிக்கையாண்டில் 6 சாதாரணக் கூட்டங்கள், 2 சிறப்புக் கூட்டம் ஆக மொத்தம் 8 கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 673 ஆகும்.

**2.2. நியமனக்குழு கூட்டங்கள்:–**

நியமனக்குழு கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

**2.3 அறிக்கையாண்டில் பணியாற்றிய ஆணையர்கள் விவரம் :–**

| வ.எண் | மாநகராட்சி ஆணையாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு.வே. நவேந்திரன், ஆணையாளர் | 01.04.2025 | 29.05.2025 |
| 2 | திருமதி.S. சசிகலா, ஆணையாளர் | 30.05.2025 | 18.06.2025 |
| 3 | திரு.வே. நவேந்திரன், ஆணையாளர் | 18.05.2025 | 26.07.2025 |
| 4 | திரு.கு. பாலசுப்ரமணியன், ஆணையாளர் | 26.07.2025 | 31.03.2026 |

**2.4 மேலாட்சி :–**

அறிக்கையாண்டில் மாநகராட்சி, பணியாளர்களின் சம்பள செலவு ரூ.3468.63 இலட்சம் ஆகும்.

அலுவலர்களையும், பணியாளர்களையும் பணி அமர்த்தல், தண்டித்தல் ஆகியவை பற்றிய பணிவிதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

**3) நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022 :–**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நேரடி தேர்தல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 28.01.2022 அன்று அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாநகராட்சிக்கான 51 மாமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்கான நேரடி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றது. 36 வது வார்டுக்கு மட்டும் 09.07.2022 அன்று நடைபெற்ற இடைத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அ) **<u>தேர்வு செய்யப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் விவரம்</u>**

| வ.எண் | மாமன்ற உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி.சா. அஸ்மா பேகம் | 1 |
| 2 | திருமதி.சே. விமலாதேவி | 2 |
| 3 | திருமதி.ஜி. ஜோதிலட்சுமி | 3 |
| 4 | திருமதி.பி. நிர்மலா | 4 |
| 5 | திருமதி.எஸ். இலக்கியா | 5 |
| 6 | திருமதி.கு. பிரியா குழந்தைவேலு | 6 |
| 7 | திருமதி.ரா. சித்ரா | 7 |
| 8 | திருமதி.சோ. சூரியா சோபன்குமார் டாக்டர் | 8 |
| 9 | திருமதி.மூ. மகாலட்சுமி | 9 |
| 10 | திருமதி.ச. சரஸ்வதி | 10 |
| 11 | திரு.கோ. சண்முகானந்தம் | 11 |
| 12 | திரு.மோ. தேவராஜன் | 12 |
| 13 | திருமதி.பா. சரஸ்வதி | 13 |
| 14 | திரு.கி. குமரவேல் | 14 |
| 15 | திருமதி.ச. மௌலி | 15 |
| 16 | திருமதி.து. சாந்தி துரைராஜன் | 16 |
| 17 | திருமதி.ஜி. சசிகலா | 17 |
| 18 | திருமதி.ரா. மல்லிகா | 18 |
| 19 | திருமதி.ச. கௌதமி | 19 |
| 20 | திருமதி.தே. அகிலா | 20 |
| 21 | திருமதி.எல். விஜிதா | 21 |
| 22 | திரு.ர. குமரகுருநாதன் | 22 |
| 23 | திருமதி.மா. புனிதா | 23 |
| 24 | திருமதி.ச. சர்மிளா | 24 |
| 25 | திரு.சு. சந்துரு | 25 |
| 26 | திரு.அ. சரவணன் | 26 |
| 27 | திருமதி.வே. ஷாலினி | 27 |
| 28 | திரு.வ. கமலக்கண்ணன் | 28 |
| 29 | திரு.கு குமரன் | 29 |
| 30 | திரு.ப. சுரேஷ் | 30 |
| 31 | திருமதி.வி. சுந்தரி | 31 |
| 32 | திருமதி.சீ. சாந்தி | 32 |
| 33 | திருமதி.க. சோபனா | 33 |
| 34 | திரு.சு.பா. பிரவீன்குமார் | 34 |
| 35 | திருமதி.பொ. ரமணி | 35 |
| 36 | திரு.கு. சுப்புராயன் | 36 |
| 37 | திரு.கே. வேலரசு | 37 |
| 38 | திருமதி.ச. சரளா | 38 |
| 39 | திரு.ச. அன்பழகன் | 39 |

| | | |
|---|---|---|
| 40 | திருமதி.சி. பானுப்பிரியா சிலம்பரசு | 40 |
| 41 | திரு.சு. சிந்தன் | 41 |
| 42 | திருமதி.த. சூரியா | 42 |
| 43 | திரு.சு. செவிலிமேடு மோகன் | 43 |
| 44 | திரு.த. விஸ்வநாதன் | 44 |
| 45 | திருமதி.சே. சாந்தி | 45 |
| 46 | திருமதி.ஆ. கயல்விழி | 46 |
| 47 | திரு.த. பிரேம்குமார் | 47 |
| 48 | திரு, ரா. கார்த்திக் | 48 |
| 49 | திருமதி.த. பூங்கொடி | 49 |
| 50 | திரு.மு. சங்கர் | 50 |
| 51 | திரு.ப. சங்கர் | 51 |
| 52 | எம். மலர், மாற்றுத்திறனாளி நியமண உறுப்பினர் | |

மேற்படி மாமன்ற உறுப்பினர்களில் 27–வது வார்டு மாமன்ற உறுப்பினர் தகுதி நீக்கத்திற்கு இடைக்கால தடை வழங்கப்பட்டதால் 01.09.2025 முதல் மாமன் உறுப்பினராக மீண்டும் பணியாற்றி வருகிறார்.

## 4) <u>பொறியியல் பிரிவு</u>

இவ்வறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு மாநகர பொறியாளர்கள் பணியாற்றியுள்ளனர்.

| வ.எண் | மாநகர பொறியாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு. R. கணேசன் | 01.04.2025 | 28.02.2026 |
| 2 | திரு.K.பன்னீர் செல்வம் (பொ) | 01.03.2026 | 31.03.2026 |

பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கு இவ்வாண்டுக்கு ஆன செலவு ரூ.27691668 சென்ற ஆண்டு ரூ.24191844 ஆகும்

<u>குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை</u>

காஞ்சிபுரம் மாநகராட்சியானது 25.10.2011 முதல் செவிலிமேடு பேரூராட்சி, ஓரிக்கை, தேனம்பாக்கம் மற்றும் நத்தப்பேட்டை ஆகிய கிராம ஊராட்சிகளையும் இணைத்து 36.14 சதுர கி.மீ பரப்பளவும், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பினபடி 2,32,816 மக்கள் தொகை கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கிய மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை 2,76,360 ஆகும். காஞ்சிபுரம் நகரம் மாவட்ட தலைநகரமாக இருப்பதுடன் பிரசித்தி பெற்ற நகரமாகவும் சுற்றுலா தலமாகவும் இருந்து வருகிறது.

காஞ்சிபுரம் நகரில் குடிநீர் விநியோகத்திற்காக பாலாற்று படுகையில் வெங்கடாபுரம், ஓரிக்கை என்ற இடத்திலும், திருப்பாற்கடல் என்ற இடத்திலும் மூன்று குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டு நகராட்சியில் பராமரிப்பில் உள்ளது. இவைகள் முறையே 1961 மற்றும் 1992 வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீர்ஊடுருவல் இவைகள் மூலமாக தினமும் சராசரியாக சாதாரண

காலங்களில் 27.50 மில்லியன் லிட்டர்கள் குடிநீரும் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு தினமும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு முறையே 100 லிட்டர்கள் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் இதுவரை 32480 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மாநகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்தவும் அரசு நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் அளவான நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர்கள் என்ற இலக்கினை செயல்படுத்த உலக வங்கி நிதி உதவியுடன் "குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை" செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்காக 150 எண்ணிக்கை ஆழ்துளைகுழாய் கிணறு கைப்பம்புகளையும், 590 எண்ணிக்கை சிறு மின்விசை மோட்டார் பம்புகளையும் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

<u>சாலை கள் குறித்த விவரம்</u>

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் மொத்த நீளம் 361.76 கி.மீ. மாநகராட்சியில் செல்லும் மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையின் நீளம் 15.58 கி.மீ ஆகும். மாநகராட்சியில் 51 வார்டுகளில் 2529 தெருக்கள் உள்ளது. இதில் தார் சாலைகள் 176.92 கி.மீ, சிமெண்ட் சாலைகள் 151.63 கி.மீ, மண் சாலைகள் 33.13 கி.மீ மற்றும் பேவர் பிளாக் சாலை 0.08 கி.மீ ஆகவும் உள்ளது.

<u>மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022-23</u>

காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஏற்கனவே பலதரப்பட்ட வகையில் உள்ள தெருமின்விளக்குகளை மாற்றி புதிய LED மின் விளக்குகளாக பொருத்தும் பணிக்கு ரூ.1250.62 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டது.

<u>உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2021-22</u>

❖ காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2021-22 ன் கீழ் ரூ.3500.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 07.07.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.இவ்விடம் தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு எண். படி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

<u>உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2022-23</u>

❖ காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2022-23 ன் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் காவலான் கேட் முதல் உத்திரமேரூர் சாலை வரை வெளிவட்ட சாலை அமைக்க வேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2022-23 ன் கீழ் ரூ.4000.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் மஞ்சள் நீர் ஓடையினை மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவுற்றது.

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2022-23 ன் கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட முதற்கட்ட பணிகள் முடிவுற்றது.

<u>மூலதன மானிய நிதி திட்டம் 2022-23</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூலதன மானிய நிதி திட்டம் 2022-23 ன் கீழ் ரூ.229.50 இலட்சம் மதிப்பீட்டில் வேகவதி ஆற்றின் குறுக்கே முருகன் குடியிருப்பு தாட்டித்தோப்பு பகுதியில் புதிய பாலம் அமைக்கும் பணி முடிவுற்றது.

<u>15-வது மானிய நிதிக்குழு திட்டம் 2023-24</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழும மானிய திட்டம் 2023-24 ன் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் பிள்ளையார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது.

<u>மூலதன மானிய நிதி திட்டம் 2023-24</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூலதன மானிய நிதி திட்டம் 2023-24 (Phase – II) ன் கீழ் ரூ.877.00 இலட்சம் மதிப்பீட்டில் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் கட்டிடம் கட்டும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<u>Tamil Nadu Climate Resilient Urban Development Program 2023-24 (UGSS)</u>

- TNCRUDP 2023-24 (Phase – I) ன் கீழ் ரூ.25400.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சி விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல் பணிக்கு 28.12.2023 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி 50% பணிகள் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- TNCRUDP 2023-24 (Phase – II) ன் கீழ் ரூ.6825.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் SBR தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதியதாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 36MLD ல் அமைத்தல் பணிக்கு 20.03.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு

பணி ஆணை வழங்கி பணிகள் 60% மேல் பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

Tamil Nadu Climate Resilient Urban Development Program 2023-24 (WS)

- TNCRUDP 2023-24 ன் கீழ் ரூ.31852.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்திடும் பணிக்கு (சிப்பம் I &II) 07.03.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் 2023-24

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (உள்கட்டமைப்பு பணிகள்) 2023-24 Phase - II ன் கீழ் ரூ.206.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒன்பது பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் பணி ஆணை வழங்கி பணிகள் முடிவுற்றது.

தூய்மை பாரத திட்டம் 2.0 2024-25

- தூய்மை பாரத திட்டம் 2.0 2024-25 ன் கீழ் ரூ.172.50 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

- தூய்மை பாரத திட்டம் 2.0 2024-25 ன் கீழ் ரூ.127.50 இலட்சம் மதிப்பீட்டில் வளமீட்பு மையம் அமைக்கும் பணிக்கு 19.06.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

- தூய்மை பாரத திட்டம் 2.0 2024-25 ன் கீழ் ரூ.172.50 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணிக்கு 24.04.2025 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி நடைபெற்று வருகிறது.

பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் 2024-25

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (உள்கட்டமைப்பு பணிகள்) 2024-25 Phase - I ன் கீழ் ரூ.53.20 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், கழிவறைகள் அமைக்கும் பணிக்கு 14.08.2024 மற்றும் 25.10.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு நான்கு பணிகள் முடிவுற்றும், மீதமுள்ள ஒரு பணியானது நடைபெற்றும் வருகிறது.

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (உள்கட்டமைப்பு பணிகள்) 2024-25 Phase - II ன் கீழ் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் இராணி அண்ணா துரை மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் அமைக்கும் பணிக்கு 03.10.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள்) 2024-25 Phase - I ன் கீழ் ரூ.17.40 இலட்சம் மதிப்பீட்டில் 3 பள்ளிகளுக்கு புதிய

கழிப்பறை அமைக்கும் பணிக்கு 16.08.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி 2 பணிகள் முடிவுற்றும், ஒரு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

**<u>மூலதன மானிய நிதி திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல் –பற்றாக்குறை நிதி) Phase –II 2024–25</u>**

- ❖ மூலதன மானிய நிதி திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்–_பற்றாக்குறை நிதி) 2024–25 Phase–II ன் கீழ் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் புனரமைப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் மிருகவதை கூடம் புனரமைத்தல் பணிக்கு 16.08.2024 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி 2 பணிகளும் முழுவதுமாக முடிவுற்றது.

**<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் (Tied Grant) 2023–24</u>**

- ❖ 15–வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் தாயார்குளம் பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடையினை புனரமைத்தல் பணிக்கு ரூ.28.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2024–25</u>**

- ❖ காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட 15–வது மானிய நிதிக்குழு மானியம் 2024–25–ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 27 நத்தப்பேட்டை கன்னிகாபுரம் பகுதியில் ஏற்கனவே செயல்பட்டு வரும் நகர்நல வாழ்வு மையம் தரைதளத்தின்மீது மேல்தளம் அமைக்கும் பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**<u>ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு திட்டம் 2023–24</u>**

- ❖ ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம் 2023–24 ன் கீழ் ரூ.6.48 இலட்சம் மதிப்பீட்டில் கழிவறைகள் பழுதுபார்க்கும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

**<u>பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் 2025–26</u>**

- ❖ பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (Capital Works) 2025–26–ன் கீழ் ரூ.62.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையங்களை புனரமைத்தல் பணிக்கு 28.04.2025ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி ஒரு பணி முழுவதும் முடிவுற்றும், மூன்று பணிகள் தொடர்ந்து நடைபெற்றும் வருகிறது.

- ❖ பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (Capital Works) 2025–26–ன் கீழ் ரூ.210.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (Capital Works) 2025–26–ன் கீழ் ரூ.280.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டும் பணிக்கு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<u>தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2025–26</u>

- தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2025–26 ன் ரூ.169.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பகுதிகளில் 3080 மீட்டர் நீளத்திற்கு 15 எண்ணிக்கையில் மூன்று சிப்பங்களாக பிரித்து புதைவடிகால் அமைக்கும் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கி 13 சாலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள சாலைகளுக்கு மாற்றாக மாற்று சாலைகள் இத்திட்டத்தின் கீழ் ரூ.14.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

<u>சிறப்பு நிதி திட்டம் 2025–26</u>

- சிறப்பு நிதி திட்டம் 2025–26–ன் ரூ.405.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பகுதிகளில் புதைவடிகால் அமைக்கும் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி 13 சாலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள சாலைகளுக்கு மாற்றாக மாற்று சாலைகள் இத்திட்டத்தின் கீழ் ரூ.95.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

<u>பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) 2025–26</u>

- பள்ளிகள் மேம்பாட்டு மானியம் திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) 2025–26–ன் கீழ் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையங்களை புனரமைத்தல் பணிக்கு பணி ஆணை வழங்கி மூன்று பணிகள் முழுவதும் முடிவுற்றது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Untied grant)–ன் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மண்டலம்–IV–க்குட்பட்ட வார்டு எண்.44, காந்தி நகர் 2–வது தெரு (008044R1440), காந்தி நகர் 3–வது தெரு (008044R1441, பங்காரம்மன் தோட்டம் 4–வது தெரு(008044R1447), பங்காரம்மன் தோட்டம் 3–வது குறுக்கு தெரு (008044R1449) ஆகிய பகுதிகளில் புதைவடிகால் திட்டத்தால் பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று பணி முடிவுற்றது.

<u>உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2021–22</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்று அடிப்படை வசதிகள் திட்டம் 2021–22–ன் கீழ் ரூ.3500.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி துவங்கப்பட்டுள்ளது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது நிதிக்குழு திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் முருகப்பா சாலையில் மழைநீர்வடிகால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கி பணிகள் முழுவதும் முடிவுற்றது.

<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் நத்தப்பேட்டை பகுதியில் ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் நாய்கள் கருத்தடை மையம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்தரவு வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.23.70 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 45, பாக்கியலஷ்மி நகர், பாக்கியலஷ்மி நகர் 3–வது (ம) 4–வது தெரு, பாக்கியலஷ்மி நகர் 1–வது குறுக்கு தெரு மற்றும் பாக்கியலஷ்மி நகர் குமார் நகர் ஆகிய பகுதிகளில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று பணி முடிவுற்றது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.42.20 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.45, ஆசிரியர் நகர், ஆசிரியர் நகர் 1–வது குறுக்கு தெரு, ஆசிரியர் நகர் டாக்டர். ராதாகிருஷ்ணன் தெரு, ஆசிரியர் நகர் வேலாயுதம் தெரு, கே.கே. நகர் கற்பகம் அவென்யூ, கே.கே. நகர் வீரசாமி தெரு மற்றும் கற்பகம் அவென்யூ (வசந்தா தெரு) ஆகிய பகுதிகளில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.37.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.45, காமாட்சியம்மன் காலணி பகுதியில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.29.30 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.45 வைகுண்ட லஷ்மி நகர், லஷ்மி வைகுந்தவள்ளி 1–வது, 2–வது மற்றும் 3–வது குறுக்கு விரிவாக்கம், லஷ்மி

வைகுந்தவள்ளி 2–வது மற்றும் 4–வது தெரு, லஷ்மி வைகுந்தவள்ளி விரிவாக்கம் மற்றும் லஷ்மி வைகுந்தவள்ளி 3–வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

- ❖ காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 45, அரசமர தெருவில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

- ❖ காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2025–26 (Tied grant)–ன் கீழ் கீழ் ரூ.16.30 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.45, எம்.ஜி.ஆர் தெரு மற்றும் திருவள்ளுவர் 2–வது (ம) 3–வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் மேல்மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

<u>கல்வி நிதி 2025–26</u>

- ❖ காஞ்சிபுரம் மாநகராட்சியில் கல்வி நிதி 2025–26–ன் கீழ் ரூ.320.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 10, உப்பேரிகுளம் பகுதியில் முதல்வர் படைப்பகம் கட்டும் பணிக்கு 31.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் (சுகாதாரம்) 2025–26</u>

- ❖ காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட 15–வது மானிய நிதிக்குழு மானியம் (சுகாதாரம்) 2025–26–ன் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் செவிலிமேடு பகுதியில் ஏற்கனவே செயல்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் தரைதளத்தின் மீது மேல்தளம் அமைத்து சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

<u>நமக்கு நாமே திட்டம் 2.0 2024–25</u>

- ❖ நமக்கு நாமே திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.51, தேனம்பாக்கம் காலணியில் அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்தல் பணிக்கு 04.06.2025–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி முழுவதும் முடிவுற்றது.

- ❖ நமக்கு நாமே திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.7, வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ள பூங்காவினை மேம்படுத்தும் பணிக்கு 08.08.2025–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி 50% மேல் பணிகள் முடிவுற்றது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- நமக்கு நாமே திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.40, பல்லவன் நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவினை மேம்படுத்தும் பணிக்கு 08.08.2025–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி முழுவதும் முடிவுற்றது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.199.00 இலட்சம் மதிப்பீட்டில் heavy duty sucker cum jetting machine கொள்முதல் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.132.00 இலட்சம் மதிப்பீட்டில் 8 எண்ணிக்கையில் Desilting Auto வாகனம் கொள்முதல் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கை உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் மஞ்சள்நீர் கால்வாயில் வெல்டு மெஷ் (Weld mesh) செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பாற்கடல் பகுதியில் தலைமை நீரேற்று நிலையத்தில் CI&DI பைப் பொருத்துதல் மற்றும் பழுதடைந்த பைல் கேப்பினை சீரமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Untied) திட்டத்தின் 2025–26ன் கீழ் ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் தாட்டித்தோப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு அணுகு சாலை அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26ன் கீழ் ரூ.36.16 இலட்சம் மதிப்பீட்டில் 1 எண்ணம் பேக்ஹோ லோடர் (Front end loader Backhoe Loader) கொள்முதல் செய்து வழங்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி வாகனம் கொள்முதல் செய்து வழங்கும் பணிகள் முடிவுற்றது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 எண்ணம் குப்பைகளை அள்ளும் இலகுரக வர்த்தக வாகனங்கள் (LCV) கொள்முதல் செய்து வழங்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு வாகனம் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் செமி–டிரெய்லருடன் கூடிய டிராக்டர் (43.98HP) கொள்முதல் செய்து வழங்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Tied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் 6000 லி – 7000 லி கொள்ளளவு சூப்பர் சக்கர் மெஷின் (Super Sucker Machine) கொள்முதல் செய்து வழங்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி துவங்கும் நிலையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15–வது மானிய நிதிக்குழு (Untied) திட்டத்தின் 2025–26–ன் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 22–இல் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்கு சாலையருகே, மழைநீர் வடிகால் மற்றும் மூடுதளத்துடன் கூடிய வலுவூட்டப்பட்ட கான்கிரீட் (R.C.C) சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி துவங்கும் நிலையில் உள்ளது.

<u>TNCRUDP Incentive Fund DLI 1 & 4 & 6th SFC Incentive Fund</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் TNCRUDP Incentive Fund DLI 1 & 4 & 6th SFC Incentive Fund–ன் கீழ் ரூ.535.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல் (Phase–II) பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

<u>6th SFC – Grants for Tourism Towns–Fixed Grant – for the year 2024–25</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சியில் 6th SFC – Grants for Tourism Towns–Fixed Grant – for the year 2024–25–ன் கீழ் ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு பூங்காக்களை மேம்படுத்தும் பணிக்கு 10.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி பணி நடைபெற்று வருகிறது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2022–23</u>

- காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழும மானிய திட்டம் 2022–23 ன் ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் உயிரி மீத்தேன் எரிவாயு ஆலை (Bio–Methanation Plant) யினை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

<u>மூலதன மானிய நிதி திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) 2025–26</u>

- மூலதன மானிய நிதி திட்டம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) (CGF O&M) 2025–26–ன் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 44 முருகப்பா சாலை பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி முடிவுற்றது.

<u>15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26</u>

15–வது மானிய நிதிக்குழு திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் நத்தப்பேட்டை வையாவூர் (நத்தப்பேட்டை) பகுதியில் நோய்வாய்ப்பட்ட, கைவிடப்பட்ட விலங்குகள் தங்குவதற்கு காப்பகம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கி பணி துவங்கும் நிலையில் உள்ளது.

**காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25**

2024–25–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.218.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1, ஒலிமுகமதுபேட்டை தர்கா பகுதியில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி | 18.65 |
| 2 | வார்டு எண்.3 ல் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 13.57 |
| 3 | வார்டு எண்.7, வைகுண்டபெருமாள் கோயில் மாடவீதியில் புதியதாக நியாயவிலைக்கடை கட்டிடம் கட்டும் பணி | 18.50 |
| 4 | வார்டு எண்.18, சீனிவாசா மேல்நிலைப்பள்ளியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 15.50 |
| 5 | வார்டு எண்.24, வி.என் பெருமாள் தெருவில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 15.50 |
| 6 | வார்டு எண்.29, நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டும் பணி | 15.25 |
| 7 | வார்டு எண்.4, அப்பாராவ் தெருவில் நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டும் பணி | 19.00 |
| 8 | வார்டு எண்.16, ஒக்கப்பிறந்தான் குளம் புதுத்தெருவில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 16.50 |
| 9 | வார்டு எண்.28, அண்ணா நகர், மிலிட்டரி ரோடில் நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டும் பணி | 19.00 |
| 10 | வார்டு எண்.10 ல் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 15.50 |
| 11 | வார்டு எண்.11 ல் நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டும் பணி | 18.10 |
| 12 | வார்டு எண்.26 ல் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 15.50 |
| 13 | வார்டு எண்.2 ல் காரிய மண்டபம் கட்டிடம் கட்டும் பணி | 18.00 |
| | **மொத்தம்** | **218.57** |

**உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25**

2024–25–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.19.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.50, மதுராமோட்டூர் இந்திரா நகர் பகுதியில் நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டும் பணி | 19.00 |

**காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25**

2024-25 ஆண்டிற்கு காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.43.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.28, டோல்கேட் பகுதியில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி | 6.50 |
| 2 | வார்டு எண்.10, சந்தவெளியம்மன் கோயில் தெருவில் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி. | 7.50 |
| 3 | வார்டு எண்.23, திருக்காலிமேடு நேதாஜி நகர் பகுதியில் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி. | 7.50 |
| 4 | வார்டு எண்.42, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி. | 7.50 |
| 5 | வார்டு எண்.2, ஏகாம்பரநாதர் கோயில் நுழைவுவாயில் பகுதியில் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி. | 7.50 |
| 6 | செவிலிமேடு நாகேஷ் மகால் அருகில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி | 6.50 |
| | **மொத்தம்** | **43.00** |

**காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-26**

2025-26 ஆண்டிற்கு காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.45.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மக்கள் நல்லுறவு மைய வளாகம் அருகில் அறையுடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO PLANT) அமைத்தல் பணி | 15.00 |
| 2 | வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அறையுடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO PLANT) அமைத்தல் பணி | 15.00 |
| 3 | காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் அறையுடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO PLANT) அமைத்தல் பணி | 15.00 |
| | **மொத்தம்** | **45.00** |

**காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-26**

2025-26-ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.119.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

| வ. | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|

| எண் | | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.14, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பூங்காவில் உபகரணங்களுடன் கூடிய மகளிர் உடற்பயிற்சி நிலையம் கட்டும் பணி | 25.00 |
| 2 | வார்டு எண்.42, செவிலிமேடு பகுதியில் அங்கன்வாடி மைய கட்ட்டம் கட்டுதல் | 15.50 |
| 3 | வார்டு எண்.08, கா.மு.சு. மேல்நிலைப் பள்ளியில் சமையல் கூடம் கட்டுதல் பணி | 8.00 |
| 4 | வார்டு எண்.07, வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணி | 15.50 |
| 5 | வார்டு எண்.18, டாக்டர்.பி.எஸ்.சீனிவாசன் மேல்நிலை பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் மாணவர்கள் படிப்பதற்கான கூடுதலாக புதிய கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளுதல் | 40.00 |
| 6 | வார்டு எண். 28, திருவீதிபள்ளம் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி | 15.50 |
| | **மொத்தம்** | **119.50** |

**<u>உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–26</u>**

2025–26–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.48 TNHB குடியிருப்பு பகுதியில் புதிய நியாய விலை கடை கட்டடம் கட்டும் பணி | 19.00 |
| | வார்டு எண்.49, சத்யா நகர் பகுதியில் புதிய அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணி | 15.50 |
| | வார்டு எண்.47, அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் குடியிருப்பு பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டடம் கட்டுதல் பணி | 15.50 |

## 6.4 <u>கோவில்கள்–29</u>

இவற்றில் தொல்பொருள் ஆய்வு துறையின் கட்டுபாட்டின்கீழ் 2 கோவில்களும், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 27 கோவில்களும் உள்ளது.

## 6.5 <u>நீர்நிலை ஆதாரங்கள்:</u>

காஞ்சிபுரம் நகரில் 44 நீர்நிலை ஆதாரங்கள் உள்ளன. அவை முறையே கோயில் குளங்கள், குட்டைகள், ஏரி மற்றும் கால்வாய்கள் ஆகும். மேற்படி நீர்நிலை ஆதாரத்தை பேணிகாக்க வேண்டிய அவசியத்தின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைக்கு இணங்க குளங்கள் சுகாதாரமான முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகரின் கிழக்கே அல்லாபாத் ஏரி மற்றும் ஓரிக்கை ஏரி ஆகியவை நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

தேனம்பாக்கம் கால்வாய், ஓரிக்கை கால்வாய் மற்றும் மஞ்சள் நீர் கால்வாய் ஆகியவை கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் தேனம்பாக்கம் மற்றும் ஓரிக்கை கால்வாய் தூர்வாரி பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நகரின் மையத்தில் ஓடும் பிரதான மஞ்சள் நீர் கால்வாயை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

## நீரளிப்பு

### 7.1 பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1897-ம் ஆண்டு முதல் வேகவதி ஆற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்தது.

நகரில் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தினந்தோறும் பெறப்பட்டு வந்த குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. காஞ்சிபுரம் நகரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை பகுதியில் பாலாற்றிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு பாதுகாப்பட்ட குடிநீர்த்திட்டம் செயலாக்கப்பட்டு வந்தது. இந்த திட்டம் 1991-ம் ஆண்டின் எதிர்பார்ப்பு மக்கள் தொகையாக 119543க்கு தேவையை கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்டதாகும்.

ஆனால் நகரின் மக்கள் தொகை ஏற்கனவே கணக்கிட்டதற்கு மாறாக 1991-ம் ஆண்டில் 145033 ஆக உயர்ந்ததால் குடிநீர் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை நிவர்த்திசெய்யும் வகையில் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒன்று பாலாற்றை மையமாகக்கொண்டு நகரின் மேற்கே 35 கி.மீ. தொலைவில் காவேரிப்பாக்கம், திருப்பாற்கடல் என்னும் இடத்திலிருந்து செயல்படுத்த அரசுக்கு பிரேரணைகள் சமாப்பிக்கப்பட்டது.

இம்மாநகராட்சிக்கு திருப்பாற்கடல் பகுதியிலிருந்து (காஞ்சிபுரம் – வேலூர் சாலையில் சுமார் 34 கி.மீ. தொலைவில் காவேரிபாக்கம் அருகில்) குடிநீர் அபிவிருந்தி திட்டம் மூலம் வேகவதி குடிநீர் இணைப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து விநியோகம் செய்யும் வகையில் சுமார் 18.63 கோடி மதிப்பீட்டில் திட்டம் அரசால் உலக வங்கி நிதி உதவியுடன் அனுமதிக்கப்பட்டது. 1992-ம் ஆண்டில் இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் 02.07.1993 முதல் 14.07.1994 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சோதனை ஓட்டம் மூலம் இயக்கப்பட்டு 15.07.1994 முதல் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தல் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டிகள் ஏழு மண்டலங்களாக பிரித்து அதன்மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

| அமைவிடம் | | கொள்ளளவு (லிட்டர் – லட்சத்தில்) |
|---|---|---|
| 1. இராஜாஜி மார்க்கெட் | – | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 2. | பேருந்து நிலையம் | – | 10.00 |
| 3. | உப்பேரி குளம் | – | 10.00 |
| 4. | ஜவஹர்லால் மார்க்கெட் | – | 20.00 |
| 5. | மண்டபம் தெரு | – | 20.00 |
| 6. | யதோத்தகாரி தெரு | – | 20.00 |
| 7. | பட்டாளத் தெரு | – | 8.00 |
| 8. | விளக்கடி கோவில் தெரு | – | 2.00 |

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2001 மற்றும் 2021 –ம் ஆண்டுகளில் 152984 மற்றும் 228000 மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டமிடப்பட்டு கடந்த 1994 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த புதிய திட்டத்தின் மூலம், சினசரி 150 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் திருப்பாற்க்கடலிலிருந்து வேகவதி மூலமும், பாலாற்று ஓரிக்கை நிலைய குடிநீர் இறைப்பான் மூலமும் நீர் இறைக்கப்பட்டு நகரின் எல்லா பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி திட்ட நீரேற்று நிலையங்கள் 1990–ல் நிறுவப்பட்டு 15 ஆண்டுகள் ஆகி திறன் குறைந்த மோட்டார் பம்புகளுக்கு பதிலாக புதிய மோட்டார் பம்புகள் மாற்றி ஆற்றல் சேமிப்பு செய்யும் பணியை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ததன் விளைவாக 2019–ம் வருடம் வரையிலான இடைப்பட்ட கால மக்கள் தொகை மற்றும் 2034–ம் வருடம் வரையிலான எதிர்வரும் கால மக்கள் தொகை பெருக்கத்தை கருத்திற்கொண்டு ஏற்கனவே சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இயக்கப்பட்டு செயல்திறன் குறைந்த நிலையில் உள்ளதை மாற்றி நாள் ஒன்றுக்கு 200 லட்சம் லிட்டர்கள் நீர் இறைக்கும் அளவுள்ள செயல்திறனுடன் மோட்டார் பம்புகள் மற்றும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஸ்டார்டர்ககள் செயல்படுத்தப்பட்டு தற்போது 180 லட்சம் லிட்டர்கள் தினசரி குடிநீர் இறைப்பு செய்யப்பட்டு நகரில் எல்லா பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் விழாக்காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் அதிகப்படியான நேரங்களில் தேவைக்கு ஏற்றப்படி குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முக்கியமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அகற்ற சுகாதாரமான நிலையில் வழங்கும்பொருட்டு நவீன தொழிநுட்பம் கொண்ட சோடியம் ஹைபோ குளோரைட் திரவ குளோரின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள அளவுகோலின்படி குடிநீர் ஆதாரம் உள்ள இடத்தில் 2.00 PPM என்ற அளவில் இயந்திரம் மூலம் குடிநீர் குழாயிலேயே செலுத்தப்பட்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் 1.00 PPM என்ற அளவிலும் பராமரிக்கப்படுவதுடன் 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சோதனை செய்தாலும் குளாரின் கலக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தில் உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மாவட்ட சோதனைக் கூடத்திலும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை சென்னை கிங் இன்ஸ்டிட்யூட் மூலமும் சோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

7.2 <u>குடிநீர் ஆதாரம்:</u>

நகராட்சி பொதுமக்களின் தேவைக்காக குடிநீர் நகராட்சியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பாற்கடல், 5 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் மற்றும் பாலாற்று படுக்கை பகுதிகளிலிருந்து பெறப்படுகிறது.

7.3 <u>குடிநீர் தேவை:</u>

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைந்துள்ள பகுதிகளுக்கு 135 லிட்டர் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் இல்லாத பகுதிகளுக்கு 100 லிட்டர் என்ற அடிப்படையில் நகரட்சியின் தினசரி குடிநீர் தேவை 27.50 MLD ஆகும்.

7.4 <u>லாரி மூலம் குடிநீர் விநியோம்</u>

குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிகளிலும் நகராட்சிக்கு சொந்தமாக உள்ள 2 எண்ணிக்கை டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

7.5 <u>குடிநீர் அல்லாத பிற உபயோகங்கள¦</u>

மேலும் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு 120 கைப்பம்புகள் மற¦றும் 423 சிறுமின¦ விசை இறைப்பான்கள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

7.6 <u>உரக்கிடங்கு</u>

காஞ்சிபுரம் மாநகராட்சி உரக்கிடங்கின் விஸ்தீரணம் 39.41 ஏக்கர் உள்ளது. நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படுகிறது. அவ்வாறு எடுத்து செல்லப்படும் திட, திரவ கழிவுகளை மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து உரம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

7.7 <u>பூங்காக்கள் :</u>

இம்மாநகராட்சி பகுதியில் உள்ள 92 பூங்காக்கள் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றன.

கச்சபேஸ்வரர் நகர் அண்ணா நுற்றாண்டு பூங்கா, வைகுண்ட பெருமாள் கோயில் தெரு மற¦றும் கே.எம்.ஜி. நகர் பூங்காக்கள் பொது மக்கள் பயன்பெறும் வகையில் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் AMRUT திட்டத்தின் 16 பூங்காக்கள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

<u>பொது சுகாதாரம்</u>

8) <u>பொது சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல் – திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் – தனி நபர் கழிப்பிடங்கள் கட்டுதல் :–</u>

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மொத்தம் 6926 வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறிந்து, அவற்றில் அனைத்து வீடுகளுக்கும்

கழிப்பறை வசதி ஏற்படுத்தி தற்போது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லா மாநகராட்சியாக உள்ளது.

### 8.1 பொது விவரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | : | 234353 |
| 2. | தற்போதைய மக்கள் தொகை | : | 284571 (தோராயமாக) |
| 3. | மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை | : | 74887 (தோராயமாக) |
| 4. | பரப்பளவு | : | 36.14 |
| 5. | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 51 |
| 6. | மொத்த தெருக்களின் எண்ணிக்கை | : | 2529 |
| 7. | மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் | : | 93 |
| 8. | தனியார் துப்புரவு பணியாளர்கள் | : | 400 |
| 9. | திடக்கழிவு சேகரிக்கப்படும் இடத்தின் பரப்பளவு | : | 39.41 ஏக்கர் (நத்தப்பேட்டை கிராமம் சர்வே எண்.484 & 484 B) |
| | **முதல் நிலை சேகரிப்பு** | | |
| 1. | BOV | : | 33 |
| 2. | ஆட்டோ (LCV) | : | 14 |
| 3. | டிராக்டர் | : | 0 |
| 4. | டம்பர் பிளேசர் பின்கள் | : | 0 |
| 5. | காம்பேக்டர் பின்கள் | : | 30 |
| 6. | ஹூக்கர் லோடர் பின்கள் | : | 2 |
| | **இரண்டாம் நிலை சேகரிப்பு** | | |
| 1. | டிப்பர் லாரி | : | 1 |
| 2. | மினி டிப்பர் லாரி | : | 2 |
| 3. | காம்பேக்டர் லாரி | : | 3 |
| 4. | ஹூக்லோடர் லாரி | : | 1 |
| 5. | ஜே.சி.பி. | : | 1 |

### 8.2 <u>திடக்கழிவு மேலாண்மை பணி</u>:–

இம்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பொது சுகாதாரப் பிரிவிற்கான திடக்கழிவு பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் திடக்கழிவு பணிகள் மேற்கொள்ளுதல், பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் வழங்குதல் மற்றும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்களை வாடகை அடிப்படையில் இயக்கி பராமரித்தல் பணிக்கு M/s Saram Enviro Service Pvt., Ltd., என்ற நிறுவனத்திற்கு 01.06.2023 அன்று முதல் பணிஉத்தரவு வழங்கப்பட்டு 07.07.2023 முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.3 <u>டெங்கு காய்ச்சல் ஒழிப்பு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்</u> :–

135 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களைக் கொண்டு கீழ்க்கண்ட டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. பைரித்ரம் மருந்தினை பயன்படுத்தி புகை ஒழிப்பு பணி மேற்கொள்ளுதல்
2. விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்.
3. டெங்கு பற்றிய விழிப்புணர்வு பேரணி நடத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் அமைத்தல்.

4. ஒருங்கிணைந்த துப்புரவு பணி மேற்கொள்ளுதல் மற்றும் கொசு உற்பத்தியாகும் கலன்களை கண்டறிந்து அழித்தல்.
5. டெங்கு விழிப்புணர்வு குறித்து "மருத்துவ முகாம்" நடத்துதல்.
6. டெங்கு குறித்து சிறப்பு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல்.
7. டெங்கு தடுப்பு பணியாளர்கள் மூலம் குழுவாக சென்று டெங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு அடையாள வில்லைகளை ஒட்டுதல்.
8. தினசரி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் காரணமாக பாதிப்படைந்தவர்கள் விவரங்களை சேகரிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8.4 <u>கழிவுநீர் – புல்பண்ணை</u>

காஞ்சிபுரம் நகரிலிருந்து சுமார் 3.50 கிலோ மீட்டர் தொலைவில் நத்தப்பேட்டை கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட நத்தப்பேட்டை கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் புல் பண்ணை 112 ஏக்கர் நலப்பரப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் 86 ஏக்கர் நிலப்பரப்பு நகராட்சிக்கு சொந்தமானதும் 26 ஏக்கர் அரசு குட்டை புறம் போக்கு பகுதியும் அடங்கும். இதில் 26 ஏக்கரில் மூன்று அடுக்குகளைக் கொண்ட கழிவுநீர் சேகரிப்பு மற்றும் ஆவியாதல் முறை மூலம் சுத்திகரிப்பும் செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலபரப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் உரக்கிடங்கு அமைக்க ஒதுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிவுநீர் தேக்க குளத்தில் யானைக்கால் வியாதிக்கு மூலகாரணமான கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்க ஆகாய தாமரை செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதுடன் கொசுக்களை கட்டுபடுத்துவதற்கு மாலத்தியான் 95% பூச்சிகொல்லி புகை தெளிப்பான் இயந்திரம் மூலமாக அவ்வப்போது தூவப்படுகிறது.

தற்போது செயல்பாட்டில் இல்லை.

9. <u>பொது சுகாதாரம் மற்றும் பணியமைப்பு விவரம்</u> :–

9.1 <u>பொது சுகாதார பிரிவு</u> :–

இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 01.04.2025 முதல் 11.03.2026 முடிய டாக்டர்.M.அருள்நம்பி, மாநகர் நல அலுவலராக அறிக்கையாண்டில் பணிபுரிந்துள்ளார்.

பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | துப்புரவு அலுவலர் | – | 1 |
| 2. | துப்புரவு ஆய்வாளர்கள் | – | 8 |
| 3. | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – | 7 |
| 4. | ஓட்டுநர்கள் | – | 4 |
| 5. | துப்புரவு பணியாளர்கள் | – | 93 |

9.2 <u>மருத்துவ பிரிவு</u> :–

| | | | |
|---|---|---|---|
| 1. | மருந்தாளுநர் | – | 1 |
| 2. | துப்புரவு பணியாளர் | – | 1 |

3. பெண் செவிலியர் உதவியாளர் – 1

9.3 <u>மகப்பேறு பிரிவு</u> :–

1. மகப்பேறு உதவியாளர் – 1
2. மகப்பேறு அ. உதவியாளர் – 0

9.4 **IPPV UHN** – 13

மேலே குறிப்பிட்ட சிப்பந்திகளுக்காக, இவ்வாண்டு ஏற்பட்ட செலவு ரூ.696.73 இலட்சம் ஆகும். சென்றாண்டு ஏற்பட்ட மொத்த செலவு ரூ.694.65 இலட்சம் ஆகும். மேலும், அறிக்கை ஆண்டில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருவிழா, அருள்மிகு வரதராஜ பெருமாள் ஸ்வாமி திருக்கோயில் திருவிழா மற்றும் அருள்மிகு காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயில் திருவிழாக்களின் போது திருப்திகரமாக தீவிர தூய்மை பணி (Mass Programme) செய்து நகரை சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**9.5 பிறப்பு வீதம், மகப்பேறு உதவியும்:–**

இந்நகரில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் நிகழ்ந்த பிறப்புகள் 5316 சென்ற ஆண்டு 2241 இவ்வாண்டு பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 0.70 சென்ற ஆண்டு 0.78 இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 1.

9.6 <u>மாநகராட்சி தாய் சேய் நல விடுதி:-</u>

இம்மாநகராட்சியில் நாராயணபாளையத்தில் ஒரு விடுதி இருக்கின்றது. தாய்சேய் நல விடுதி மாநகராட்சியின் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதில் மகப்பேறு உதவியாளர் 1 பேரும், ஆயாக்கள் 0 பேரும் பணிபுரிகின்றனர்.

9.7 <u>குழந்தைகள் இறப்பு:-</u>

1– மகப்பேறு உதவியாளர்கள் மகப்பேறு எய்துபவர்களை பிரசவத்திற்கு முன் 2845 தடவையும், மகப்பேறு எய்திய பின் 2950 தடவையும் பார்வையிட்டு கவனித்து வந்தனர்.

இவ்வாண்டு மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதார செவிலியர்கள் அறிக்கையாண்டில் பார்த்த மகப்பேறுகளின் எண்ணிக்கை 88 சென்ற ஆண்டு 67 எண்ணிக்கை ஆகும்.

இந்த ஆண்டில் தாய்சேய் நலபிரிவிற்காக செலவு ரூ.163.40 இலட்சம், சென்ற ஆண்டு செலவு ரூ.162.70 இலட்சம் ஆகும்.

**9.8** <u>குடும்ப கட்டுப்பாடு</u>:–

இம்மாநகராட்சியில் குடும்பநல திட்டத்தின்கீழ் 2025–2026ஆம் ஆண்டு 603 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**9.9** <u>நகர ஆரம்ப சுகாதார மையங்கள்:-</u>

அரசு ஆணை எண்.190 சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை நாள்.19.09.2022–ன்படி காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஐந்து நகர ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன.

**9.10** <u>நகர் நல மையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் விவரம்;</u>

| வ.எண் | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை | பணியில் உள்ளவர்கள் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர்கள் | 3 | 0 |
| 2 | பொதுசுகாதார செவிலியர்கள் | -- | -- |
| 3 | பொதுசுகாதார பார்வையாளர்கள் | 3 | -- |
| 4 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | -- | -- |
| 5 | பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் | 16 | 10 |
| 6 | பெண்அலுவலக உதவியாளர்கள் | 3 | 0 |

மேற்படி மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்காக ஊதியம் அரசு ஆணை எண்.136 குடும்ப நலத்துறை நாள் 31-03-2001 ன்படி 66.67% மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப் படுகின்றன. 33.33% சதவீத செலவினம் மாநகராட்சி மூலம் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களின் முக்கிய பணிகள் குடும்ப நல திட்டத்தை ஊக்குவிப்பதாகும். இதன்படி நமது நகர எல்லைக்குட்பட்ட மக்களை கணக்கெடும் செய்து இதில் கருத்தடை செய்து கொள்வதற்கு தகுதி வாய்ந்த தம்பதியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடும்ப நலம் பற்றிய கருத்துருக்களை எடுத்துக்கூறி நிரந்தர கருத்தடை முறை மற்றும் தற்காலிக கருத்தடை சாதனங்களை பயன்படுத்துமாறு ஊக்குவித்தல் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு பேறுகால முன், பின் கவனிப்பு மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போன்ற பணிகளை செய்வது ஆகும்.

இதன்படி இம்மாநகராட்சியில் 2025-2026 ஆண்டிற்கு 702 தாய்மார்களுக்கு குடும்ப நல நிரந்தர முறையாக சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 501 தாய்மார்களுக்கு தற்காலிக முறையாக ஐ.யு.டி. சாதனமும் 167 தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரைகளும், 360 ஆண்களுக்கு (நிரோத்) வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 1873 கருவுற்ற தாய்மார்களை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு இரண ஜன்னி தடுப்பூசி 1860 தாய்மார்களுக்கு போடப்பட்டுள்ளது. இவர்களின் 1700 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்காக முத்தடுப்பூசி 1800 குழந்தைகளுக்கும், போலியோ சொட்டு மருந்து (கூடுதல் போலியோ உட்பட) 1950 குழந்தைகளுக்கும், தட்டம்மை ஊசி 1900 குழந்தைகளுக்கும் காசநோய் தடுப்பூசி 1900 குழந்தைகளுக்கும், போடப்பட்டது.

**9.11 <u>இறப்பு விகிதம் - கொள்ளை நோய்களும், மகப்பேறு நோய்களும்</u> :-**

இம்மாநகரில் உள்ள இரண்டு மருத்துவ நிலையங்களில் ஏற்பட்ட வெளியூர் மக்களின் இறப்புகள் உட்பட இவ்வாண்டு பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 1520 சென்ற ஆண்டு 5.80 இவ்வாண்டு இறப்பு விகிதம் 5.34

| நோய் விவரம் | இறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1.காய்ச்சல் | - |
| 2.சீதபேதி | -- |
| 3.மூச்சுப்பை நோய்கள் | 1380 |
| 4.இதர நோய்கள் | 70 |

| | |
|---|---|
| 5.வாந்திபேதி | -- |
| 6.வயிற்று போக்கு | -- |
| 7.தற்கொலை | 20 |
| 8.விபத்துகள் | 50 |
| 9.காசநோய் | -- |
| **மொத்தம்** | **1520** |

**9.12 <u>வாந்திபேதி</u> :–**

இவ்வாண்டு வயிற்றுப்போக்கு நோயினால் 57 பேர்கள் பாதிக்கப்பட்டனர். இதில் யாரும் இறக்கவில்லை. இந்த நோய் சிகிச்சை செய்ய அரசாங்க மருத்துவ மனையில் தொற்றுநோய் கொட்டகைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

9.13 **<u>நோயாளிகள் :–</u>**

மாநகராட்சியால் நடத்தப்படும் நகர் நல ஆரம்ப சுகாதாரம் நல்ல முறையில் நடைபெற்று வந்துள்ளன. இவ்வாண்டு மருத்துவ உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 1830 சென்ற ஆண்டு 1865 எண்ணிக்கை ஆகும்.

**9.14 <u>பொது நலத் துறை ஆட்களின் வாழ்க்கை நிலை</u> :–**

இம்மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது. எல்லா அரசு விடுமுறை நாட்களிலும் மற்றும் ஞாயிறு கிழமைகளில் இவ்வறிக்கை ஆண்டில் துப்புரவு பணியாளர்களுக்கு பிற்பகல் விடுப்பு வழங்கப்பட்டது.

9.15 **<u>தெரு நாய்களுக்கு கருத்தடை பணி :–</u>**

2025-2026 ம் ஆண்டு மாநகராட்சியின் சார்பாக நாய்களைப் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

9.16 **<u>கொசு ஒழிப்பு பணி</u> <u>:–</u>**

அறிக்கையாண்டில் TEMEPHOSE 50 % E.C 60 லிட்டர் வாங்கி பயன்படுத்தப்பட்டது.

மாநகராட்சியின் மூலம் தூய்மை பணியாளர்கள் மேலத்தியன் மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மூலமாக 140 லிட்டர் Pyrethrum Extract 2 % வாங்கி வளர்ந்த கொசுக்களை புகைதெளிப்பான் மூலமாக அழிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

9.17 **<u>துப்புரவு :–</u>**

தினசரி தெருக்களில் குப்பையும், மணலும் மற்ற கழிவுப்பொருட்களும் இம்மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மூலம் எருத்திடலுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

| வ.எண் | வாகனங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | டம்பர் பிளேசர் | 0 |
| 2. | குப்பை லாரி | 1 |
| 3. | மினி லாரி | 2 |
| 4. | டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 0 |
| 5. | குப்பை வண்டிகள் (BOV) | 33 |
| 6. | ஆட்டோ (LCV) | 14 |
| 7. | Front End Loader (JCB) | 1 |
| 8. | ஜூக் லோடர் லாரி | 1 |
| 9. | காம்பாக்டர் லாலி | 3 |

9.18 <u>உரக்கிடங்கு</u>:–

உரக்கிடங்கின் விஸ்தீரணம் 39.41 ஏக்கர் உள்ளது. நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படுகிறது.

பாதாள சாக்கடை திட்டம் அமுலில் உள்ளதால் கழிவுநீர் உரக்கிடங்கு உபயோகப்படுவதில்லை.

2018ம் வருடத்திய திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றும் வகையில் திடக்கழிவு மேலாண்மை செய்திட மாநகராட்சிக்கு சொந்தமான நத்தப்பேட்டை கழிவுநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.76.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டத்தை நிறைவேற்றிட தமிழ்நாடு நகர்ப்புற நிதியம் மற்றும் கூட்டமைப்பு மேம்பாடு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளது.

தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பைகளை தரம் பிரித்து 13 MCC Centre–ல் 38 MT உரமாக்கப்படுகிறது. மக்காத பிளாஸ்டிக்குகளை மாநகராட்சி மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட Ultratech நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 4 MRF மையங்களில் பிளாஸ்டிக்குகளை சேமித்து வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், புதியதாக 13 உரக்கிடங்கு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

<u>பொது மல அறைகள்</u>

9.19 <u>கட்டண கழிப்பிடம் :–</u>

இம்மாநகராட்சியில் 31 பொது மல அறைகளும், 1 சிறுநீர் கழிப்பிடம் இருந்தது, கீழ்கண்ட இரண்டு நவீன கழிப்பிடங்கள் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டது.

இராஜாஜி சந்தை அருகில் – 1
விளக்கடி கோயில் அருகில் – 1
பொது கழிப்பிடங்கள் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.
பேருந்து நிலையத்தில் மூன்று கழிப்பிடங்களை தனியார் ஒப்பந்தம் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

10) <u>சத்துணவு திட்டம்</u> :–

15.09.1982–ம் தேதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு சத்தணவு வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் 26 சத்துணவு மையங்கள் உள்ளன அதில் 1 முதல 12–ம் வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் பயனடைகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு சமையலர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் சத்துணவு பணிகள் நடைபெறுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2025–2026 தினசரி சராசரியாக 2443 பிள்ளைகள் பயன்பெறுகின்றனர். 28.10.2014 முதல் சத்தணவு மையங்களில் பயன்பெறும் பிள்ளைகளுக்கு தினமும் மசாலா முட்டையுடன் கலவை சாதமும் தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

11) <u>வருவாய் பிரிவு :–</u>

11.1 <u>சந்தை</u> :–

இராஜாஜி தினசரி சந்தை மிகவும் 100 ஆண்டுகள் கடந்த பழமை வாய்ந்ததும் பல்வேறு மக்கள் தினமும் வந்து செல்லக்கூடிய சந்தையாகும். மேற்படி சந்தை பழுதடைந்துள்ளதால் அவற்றை புதுப்பித்து கட்டவும் இறைச்சி, மீன் அங்காடிகளுக்கு மலர் மற்றும் கனிகளுக்கு தனித்தனி பிரிவுகள் கொண்டதும் அனைத்து விதமான அங்காடிகளும் ஒரேஇடத்தில் அமையும் விதத்தில் அங்காடிகள், அவைகளுக்கு முறையான பாதைகள், பொருட்களை பதப்படுத்த குளிரூட்டு வசதி ஆகிய வசதிகளுடன் கட்டமைப்பு ஏற்படுத்த மதிப்பீடு ரூ.218.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற நிதியம் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேற்படி பணியானது ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மீன் இறைச்சி அங்காடி மற்றும் நவீன ஆடு அறுக்கும் தொட்டி ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

11.2 <u>பேருந்து நிலையம்</u> :–

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை முதல்தர பேருந்து நிலையமாக மாற்றுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் மொத்தம் ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 11.06.1992–ம் தேதிய ந.க.எண்.23125/87/U.P.2 கடிதத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

<u>பணிகளின் விவரம்</u>

| | | |
|---|---|---|
| 1. பேருந்து நிறுத்தம் தளம் | .. | 52 |
| 2. பயணிகள் தங்கும் இடம் | .. | 2 |
| 3. பேருந்து உட்புறம் கடைகள் | .. | 77 |
| 4. கழிவறைகள் | .. | 2 |
| 5. சிறுநீர் கழிக்கும் இடம் | .. | 2 |
| 6. பேருந்து உட்புற சாலைகள் | .. | 3 |

மேற்படி திட்டம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டப்பட்ட கடைகள் மூலம் வருவாய் பின்வருமாறு :–

11.3 <u>குத்தகைகள்; 2025–2026</u> :–

<u>பேருந்து நிலையம் குத்தகைகள்</u>

| வ. எண் | குத்தகை விவரம் | தொகை | |
|---|---|---|---|
| 1 | மாநகராட்சி பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் பேருந்துகள் புறப்படும் காலத்தை அறிவிப்பதும் தனியார் விளம்பரம் விளம்பரப்படுத்தும் உரிமம் | ரூ. | 281100 |
| 2 | பேருந்து நிலையத்தில் எதிர்புறம் உள்ள மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் ஸ்டேண்ட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 1415500 |
| 3 | மாநகராட்சி பேருந்தில் பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 1394663 |
| 4 | பேருந்து நிலைய குடிநீர் தேக்க தொட்டிக்கு தென்புறம் உள்ள காலியிடத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள இருசக்கர வாகனங்கள் ஸ்கூட்டர், சைக்கிள் ஸ்டேண்ட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 965000 |
| 5 | பேருந்து நிலைய IDSMT கடைகள் குத்தகை உரிமம் | ரூ. | 78099981 |
| 6 | பேருந்து நிலைய நுழைவாயில் கடைகள் குத்தகை உரிமம் | ரூ. | 11065228 |
| 7 | நீர்த்தேக்கத் தொட்டி அருகில் உள்ள கடைகள் குத்தகை உரிமம் | ரூ. | 2340921 |
| 8 | பேருந்து நிலையத்தில் உள்ள ஹோட்டல் குத்தகை உரிமம் | ரூ. | 1895903 |
| 9 | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்கள் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் | ரூ. | 3107793 |

<u>இதர குத்தகைகள்</u>

| வ. எண் | குத்தகை விவரம் | தொகை | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. | 202000 |
| 2 | விளக்கடி கோயில் தெருவில் (ரங்கசாமி குளம் தென்புறம் உள்ள) கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. | 223023 |
| 3 | அருள்மிகு காமாட்சியம்மன் கோயில் அருகில் நிற்கும் யாத்திரிகர்கள் பஸ், வேன், கார்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. | 2228100 |
| 4 | அருள்மிகு ஏகாம்பரநாதர் கோயில் அருகில் நிற்கும் யாத்திரிகர்கள் பஸ், வேன், கார்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. | 1890000 |
| 5 | பெரிய காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் அருகில் நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரூ. | 234150 |
| 6 | சாலையோர தினசரி தற்காலிக கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 1802500 |
| 7 | திருவீதிபள்ளம் பஸ், கார்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 752000 |
| 8 | ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (சாணம், குப்பை உட்பட) | ரூ. | 93120 |
| 9 | இரயில்வே ரோட்டில் உள்ள இராஜாஜி மாநகராட்சி சந்தை அருகில் உள்ள பொது கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 402413 |
| 10 | இராஜாஜி மாநகராட்சி மீன், ஆட்டிறைச்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 110250 |
| 11 | இராஜாஜி மாநகராட்சி மீன், ஆட்டிறைச்சி சந்தை அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ. | 220500 |

<u>நகரமைப்பு</u>

12.1 **கட்டிட உரிமம்**

அறிக்கை ஆண்டில் 173 கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

12.2 **அளவு கடப்புகள்**

புதியதாக ஏற்படும் கடப்புகளை அவ்வப்போது அகற்றப்பட்டன. ஆண்டு முடிய ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

13.1 **பொது வருமானம்**

| வ. எண் | வரி விகிதங்கள் (சொத்து வரி) | அரையாண்டு வீதம் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் |
|---|---|---|
| 1 | பொது | 8.33% |
| 2 | குடிநீர் விநியோகம் மற்றும் புதை வடிகால் | 6.00% |
| 3 | கல்வி | 2.50 % |
| 4 | நூலக வரி | 1.43% |
| | **மொத்தம்** | 18.26 % |

கட்டிடத்தோடு சேராத காலிமனை வரி அரையாண்டிற்கு காலிமனைக்கான நில மதிப்பின் பேரில் 120 பைசா, 100 பைசா, 80 பைசா வீதம் கணக்கிடப்படுகிறது.

13.2 **சொத்து வரி**

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2025–2026 மொத்த சொத்துவரி விதிப்புகள் 54377 ஆகும். அதன் கேட்பு ரூ.2645.19 இலட்சமாகும்.

13.3 **குடிநீர் கட்டணம்**

மொத்த வரி விதிப்புகள் – 32507
மொத்த கேட்புத் தொகை – ரூ.198.76 இலட்சம்

13.4 **புதைவடிகால் கட்டணம்**

மொத்த வரி விதிப்புகள் – 21985
மொத்த கேட்புத் தொகை – ரூ.211.88 இலட்சம்

13.5 **தொழில் வரி**

தொழில் வரி நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரி விகிதங்கள் தமிழ்நாடு தொழில் வரி சட்டம் 9/9–4–ன் படியும் மற்றும் 12/95–ன் படியும் வெளியிடப்பட்ட அட்டவணைப்படி வசூலிக்கப்படுகின்றன. 12.01.1999–ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அசராணை எண்.11–ன்படி 01.10.2023 முதல் தொழில்வரி விகிதங்களை 25 சதவீதம் உயர் செய்து திருத்தி அமைக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன.

மொத்த வரி விதிப்புகள் – 5177
மொத்த கேட்புத் தொகை – ரூ.253.93 இலட்சம்.

13.6 **வழக்குகள் :–**

2025–2026–ம் ஆண்டில் சொத்து வரி சம்பந்தமாக 13 சொத்து வரி விதிப்புகளின் மீது வழக்குகள் உள்ளது. வழக்குகள் மூலம் நிலுவைத் தொகை ரூ.57.71 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

14) **தணிக்கைத் தடைகள் :–**

2025–2026–ம் ஆண்டின் ஆரம்பத்தில் 1510 தணிக்கை தடைகள் இருந்தது. தற்போது 1486 தணிக்கை பத்திகள் நிலுவையில் உள்ளது. அறிக்கையாண்டில் தணிக்கை தடைகள் ஏதும் நிவர்த்தி செய்யப்படவில்லை.

15) **நிதி நிலைமை :–**

இந்நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றில் இவ்வாண்டு வருமானம் ரூ.8204.53 இலட்சம் மற்றும் செலவினம் ரூ.8305.53 இலட்சமாகும்.

16) **கடன்கள்** :–

கடன்களுக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பிச்செலுத்தும் வகையில் ரூ.270.46 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

17.1 **Scheme for Shelter for Urban Homeless (SUH)** :–

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பஞ்சுப்பேட்டை பெரிய தெருவில் நகர்புற வீடற்றவர்களுக்கு தங்கும் விடுதி கட்டி 14.06.2017 முதல் நாளந்தா கல்வி அறக்கட்டளை, திண்டுக்கல் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மதிப்பீடு ரூ.50.00 இலட்சம் ஆகும்..

17.2 **Special Shelter** :–

காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளுகளுடன் உடன் வருபவர்களுக்கு தங்கும் விடுதி கட்டிடம் 2017–18 ஆம் ஆண்டு Special Shelter திட்டத்தில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. 2019 செப்டம்பர் முதல் இக்கட்டிடம் New Spring Charitable Trust, Kancheepuram என்ற தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளுடன் உடன் வருபவர்கள் தங்குமி விடுதி கட்டிடத்தில் (சிறப்பு கட்டடம்) தினசரி சராசரியாக 108 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். நகராட்சிக்கு அரசின் மூலம் (O & M) நிதி மான்யம் பெற்று New Spring Charitable Trust மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது.

### 17.3 Shelter for Urban Homeless

காஞ்சிபுரம் நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு தங்கும் விடுதி கட்டிடம் இராஜாஜி மார்க்கெட் பகுதியில் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு New Spring Charitable Trust, Kancheepuram என்ற தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 85 வீடற்ற பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகின்றனர். நகராட்சிக்கு அரசின் மூலம் (O & M) நிதி மான்யம் பெற்று New Spring Charitable Trust மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது.

### 17.4 தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் SCHEME FOR URBAN STREET VENDOR (SUSV) :–

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தேசிய நகர் புற வாழ்வாதார திட்டத்தில் (NULM) Scheme for Urban Street Vendor என்ற திட்டநிதி கணக்கு துவக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோரம் வியாபாரிகள் விபரம் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மொத்த பயனாளிகள் 717 நபர்களுக்கு நகராட்சியின் மூலம் வியாபார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளது. எஞ்சியுள்ள சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்றிதழ் வழங்க பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### 17.5) சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் (PM–SVANidhi)

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் – PM–SVANidhi திட்டத்தில் கொரோனா ஊரடங்கு காலத்தில் துவங்கப்பட்ட சாலையோர வியாபாரிகள் பொருளாதாரம் மேம்பாடு அடைய சாலையோர வியாபாரிகளுக்கு PM–SVANidhi திட்டத்தில் தலா ரூ.15,000/– வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்திரவின்படி இம்மாநகராட்சியில் 5790 இலக்காக நிர்ணயிக்கப்பட்டு சாலையோர வியாபாரிகளை பரிந்துரை செய்து வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

4814 பயனாளிகளின் குடும்ப விவரங்கள் PM–SVANidhi திட்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு மத்திய அரசின் 8 திட்டங்களில் பயன்பெறும் வகையில் இணையத்தளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதில் வங்கிகளின் மூலம் 5374 பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 4815 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் தலா ரூ.15,000/– கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பயனாளிகளில் 2707 வியாபாரிகளுக்கு 2 ஆம் தவணையாக தலா ரூ.20,000/– வீதம் வங்கிகள் மூலம் கடனுதவி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில் 2434 வியாபாரிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 2356 வியாபாளிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம் தவணையாக கடனுதவி திட்டத்தின் கீழ் ரூ.50,000/– வீதம் 920 வியாபாரிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு 629 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2 மற்றும் 3 தவணைகள் பெற்று தொகையை சரியாக திரும்ப செலுத்திய வியாபாரிகளுக்கு ரூ.30,000/– வரை கடனுதவி பெற கிரெடிக் கார்டு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

18) <u>மின் ஆளுமை</u> :–

நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன. மண்டல அலுவலகத்திற்கு இணையதள வசதி மற்றும் கணினிகள் வழங்கப்பட்டு உள்ளன.

மேலும் இந்நகராட்சியில் புதிய மென்பொருள் (UTIS – Urban Tree Information System) மூலம் நகராட்சியின் சேவைகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள், புதிய கணக்குமுறை, கட்டிட அனுமதி, வரவு செலவு கணக்குகள், மதிப்பீடு அறிக்கை, தணிக்கை தடை ஆகியவைகள் கணினியில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் இணையதளம் மூலம் பொதுமக்கள் தாங்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணினியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் மற்றும் பொதுமக்கள் தங்களது சொத்து வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணங்கள், தொழில் வரி, வரியில்லா இனங்கள் (Non Tax), கட்டிட அனுமதி ஆகியவைகள் அனைத்தும் இணையதளம் மூலம் செலுத்தும் வசதிகள் நடைமுறையில் உள்ளது. இவ்வலுவலக அனைத்து பிரிவுகளுக்கும் இணையதள வசதியுடன் கணினிகள் வழங்கப்பட்டு அலுவலக நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுக் கணக்குகள், வரவு–செலவு திட்டம் மற்றும் மாமன்ற தீர்மானங்களை மாநகராட்சியின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கணினி மூலம் வரி வசூல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) நகராட்சி அலுவலகத்திலும் (2) சின்ன காஞ்சிபுரம் – தாய்சேய் நல விடுதி (3) பெரிய காஞ்சிபுரம் – கிருஷ்ணன் தெருவிலும் வசூல் மையம் மற்றும் (4) எல்லப்பா நகர், செவிலிமேடு பகுதி வரி வசூல் கணினி சேவை மையம் துவங்கப்பட்டு சொத்து வரி, குடிநீர் கட்டணம், புதை வடிகால் கட்டணம் மற்றும் தொழில்வரி, வரியில்லா இனங்கள் மற்றும் புதை வடிகால் வைப்பு தொகை ஆகிய வரியினங்கள் மற்றும் அபாயகரமானதும் அருவறுக்கத்தக்கதுமான (D&O) தொழில்களுக்கான கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட உரிமம் அனுமதி அளித்தல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், அசையா சொத்துக்கள் குறித்த விவரம், தணிக்கை தடைகள் மற்றும் நகராட்சி கணக்குகள் புதிய மென்பொருள் (UTIS) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19 பொது :–

அறிக்கையாண்டில் காஞ்சிபுரம் மாநகர பகுதிவாழ் மக்கள் மற்றும் வரி செலுத்துபவர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், மாநகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்பவும், இதர திட்டங்கள் வாயிலாகவும், தரமான சாலை வசதி, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வடிகால் வசதி, மழைநீர் சேமிப்பு வசதி செய்யப்படுவதுடன் ஆண்டுதோறும் சிறப்பான முறையில் மேற்படி வசதிகளை செய்து மக்கள் பயன் அடைய வேண்டும் என்ற குறிக்கோள் கடைபிடிக்கப்பட்டு மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தில் நல் ஒத்துழைப்பு நல்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வலுவலக பிரிவு அலுவலர்களாகிய மாநகரப் பொறியாளர், மாநகர நல அலுவலர், மாநகர திட்டமிடுநர், நிர்வாக அலுவலர், கணக்கு அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் அனைத்து அகப்பணியாளர் மற்றும் புறப் பணியாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

19/5/26

ஆணையாளர்
காஞ்சிபுரம் மாநகராட்சி

19/5/2026